2. தகவல் கோரல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(அ) காங்கேயநல்லூர் ஒன்றியத்தில் மஞ்சள் காமாலை நோய் பரவியிருப்பது.

திரு.என். ஏ. பூங்காவனம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தொகுதியில் காங்கேயநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்துப் பகுதி ம் பல நூற்றுக் கணக்கான மக்களுக்கு மஞ்சள் காமாலை ய் ஏற்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அவதிப்ப ார்கள். அது சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோட்டீஸ் த்துவிட்டு கேட்கவேண்டும்.

(ஆ) சென்னையில் அடைமழையினால் ஏற்பட் சேதம்

டாக்டர் கே.பி.இராமலிங்கம்; மாண்புமிகு பேரவை லைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக செ்னை கரில் கடுமையான மழை பெய்த காரணத்தால், வெள்ளத்த ழை குடிசை வாசிகளும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கி கள் இதுகுறித்து அரசு....

திரு. சோ. அழகர்சாமி; ஏற்கெனவே வெள்ளம் சம்ப த மாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது....

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றும் இதுபற்றிக் கேட்டார்கள். நேற்று மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் நேரில் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். குடிசை வாரியத் தலைவர் அவர்களும் பல இடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார்கள். தாழ்வான பகுதிகளிலே சங்கடப்படுபவர்களையெல்லாம் பாதுகாப்பான பகுதிகளிலே வைத்து மாநகராட்சி மூலமாக உணவு வழங்கப்படுகிறது. சென்னை நகரிலே பலத்த மழையினால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் நிரம்பி குடிசைப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இதனால் வடசென்னைப் பகுதியில் சுமார் 5,000 குடும்பங்களும் தென்சென்னைப் பகுதியில் சுமார் 4,000 குடும்பங்களும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயின. வடசென்னையில் 23,085 பேர்களுக்கும் தென் சென்னையில் 19,980 பேர்களுக்கும் இலவசமாக உணவு வழங்கப்பட்டது. மழை நின்று விட்டதால் இரவில் பலர் அவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்று விட்டார்கள். இருந்தபோதிலு அப்படித் திரும்பிச் செல்ல முடியாமலிருந்த 30,000 குடும்பகளுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது ..(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஏற்கனவே இதுபற்றி வெள்ளை அறிக்கை வைப்பது என்றும் அதுபற்றி விவாதிக்கலாம் என்றும் அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பட்டுள்ளது..

திரு. எல். இளையபெருமாள்; சென்னையைப் பற்றி மட்டும் சொல்கிறார், சொல்லட்டும்.

திரு. சோ. அழகர்சாமி; பேரவைத் தலைவர் அவர்களே, நான் கிளப்புவது ஒழுங்குப் பிரச்னை. ஏற்கெனவே இது சம்பந்தமாக எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது சென்னை நகரத்திலே வெள்ளத்தினால் மாமூல் வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்த எந்த இடத்திலே, எப்படி எப்படி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதோடு நாங்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நீங்கள் ஏதாவது மதிப்பளித்து எங்களுக்கு ஒரு வாய்ப்பளித்து எங்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க நீங்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

திரு. என். எஸ். வி. சித்தன்: ஏற்கெனவே பல்வேறு சமயங்களிலே இதுபற்றி பேசியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட நாங்கள் அதைக் கேட்டதற்குப் பதிலாக ஒரு வெள்ளை அறிக்கையை வைக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். இதுபற்றி விவாதிப்பதற்கு நாள் நிச்சயித்து விட்டோம். இன்னும் அறிக்கை வைக்கவில்லை. என்றைக்கு கொடுக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் அதன் மூலம் நாங்கள் திருப்தி அடையலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளை அறிக்கை தயாராக இருக்கிறது. 22 ஆம் தேதி பேசவேண்டியிருப்பதால் 20 ஆம் தேதி அறிக்கையை வைத்தால் அதை படித்துவிட்டு உறுப்பினர்கள் பேசலாம். அதுமட்டுமல்லாமல் கிடைக்கிற தகவல்களை கடைசிவரைக்கும் சேகரித்துக் கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அறிக்கையை 20-ம் தேதி பூரணமாக வைக்கிறேன் என்பதைத் தெரிவித்து இன்றைக்கு சென்னை குறித்து தெரிவிக்கிறேன். சென்னையில் 20 ஆயிரம் பேர்களுக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு பேசுகிறபோது அமைச்சர்கள் சென்றார்களா என்று கேட்டார்கள். சென்றோம், பார்த்தோம். அவர்களுககு உணவு வழங்கப்பட்டது. பாதுகாப்பான இடங்களில் அவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. என். எஸ். வி. சித்தன்: கொடுக்கிறோம் என்று சொன்னால் எப்படி பொருத்தமாக இருக்கும்? இருக்கிற தகவல்களை இப்போது கொடுக்க வேண்டியது தானே?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அமைச்சர் அவர்கள் அறிக்கை வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற காரணத்தாலே சென்னையில் இருக்கிற குடிசைப் பகுதி மக்களுடைய கஷ்டங்களை நேரடியாகப் பார்த்து இப்போது பேசப்படுகிறது. அதனால் தமிழகம் முழுவதும் இருக்கிற கிராமப்புற மக்களுக்குப் பிரதிநிதிகள் இல்லையோ என்ற நிலை வந்து விடக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெள்ளை அறிக்கை வைக்கிறபோது விவரங்கள் எல்லாம் வந்து விடும். 22 ஆம் தேதி ஐந்து மணி நேரம் விவாதிக்கப் போகிறோம், அப்போது எல்லாவற்றையும் விவாதிக்கலாம்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை நகரிலே இருக்கிற மக்களுக்கு என்னென்ன உதவிகளைச் செய்தோம் என்று சொன்னார்கள். இங்கிருப்பதைவிட அதிகமாக தமிழகத்தினுடைய கிராமப்புற மக்கள் கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். வயலிலே இருக்கிற கதிரை அவர்களால் கொண்டுவர முடியவில்லை. விலைச்சலை அவர்கள் கண்ணாலும் பார்க்க முடியவில்லை. அங்கே அவைகள் எல்லாம் முளைத்துப் போய் இருக்கின்றன. அவர்களும் குடிசைகளில் வாழ்ந்து இப்போது குடிசைகளை இழந்து இருக்கிறார்கள். ஆகவே ஒட்டு மொத்தமாக பார்த்து கிராமப்புற மக்கள் நிவாரணம் பெறுவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை என்று குறிப்பிட்டு கேட்டதால்தான் அமைச்சர் அவர்கள் அதுபற்றிச் சொன்னார்கள். வெள்ளை அறிக்கை வந்தால் நீங்கள் எல்லோரும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: 20 ஆம் தேதி வரையில் ஏன் காத்திருக்க வேண்டும்? இப்போதே அறிக்கை தயாராக இருக்கிறது. இன்றைக்கு வரைக்கும் அமைச்சர் சொல்லி விடலாமே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நேற்றைக்கும் பெரும்மழை பெய்திருக்கிறது. இன்றும் பெய்து கொண்டிருக்கிறது. ஆங்காங்கே அரசின் சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன் ஏற்பாடுகளை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் விவரமான அறிக்கையில், சென்னை நகரம் மட்டுமல்லால், தமிழகம் முழுவதும் ஏற்பட்டிருக்கிற விளைவுகள் அதன் சார்பாக எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் ஆகிவற்றை வெள்ளை அறிக்கை மூலமாக 20 ஆம் தேதி வைப்பார்கள். 22 ஆம் தேதி மலையில் அது சம்பந்தமா விவாதம் வைத்திருக்கிறதாலே அதிலே விடப்பட்டுள்ள பல்வேறு

TRUTH ALONE TRIUMPHS

கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முழு வாய்ப்பு இருக்கிறது. இருக்கிற நிலைமைகளை அமைச்சர் அவர்கள் அப்போது எடுத்துச் சொல்வதற்கு வ ய்ப்பு ஏற்படும். விரிவான அறிக்கை வைக் வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிற காரணத்தாலே 20 ஆம் தேதி கா ல அமை ச்சர் அவர்கள் கட்டாயம் அறிக்கை வைப்பார்கள். 22 ம் தேதி ம லை அதுபற்றி உறுப்பினர்கள் விரிவாக விவாதி ம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னபோது, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் உணவு கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். நேற்று இரவும், முந்தாநாள் இரவு தான் உணவு கொடுக்கப்பட்டதே தவிர நேற்று பகல் உணவு கொடுக்கப்படவில்லை. நேற்று இரவு கூட சில இடங்களில் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தொகுதியில்கூட இந்த அவல நிலை இருக்கிறது. இன்னும் சீராக வெள்ளம் வடியவில்லை. இன்னும் 5 நாட்கள் ஆகும். ஆகவே, அவர்கள் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் தங்கவும், அவர்களுக்கு உணவும் இன்னும் 5 நாட்கள் கொடுக்க அரசு முன்வருமா?

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் காலை 6 மணி முதல் 9 மணி வரையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை நான் சென்று பார்வையிட்டு வந்தேன். நிறைய குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியில் எந்தவிதமான வெள்ள நிவாரண உதவியும் இதுவரையில் செய்யப்படவில்லை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முழுவதும் மழை பெய்து ஆங்காங்குள்ள பகுதிகள் பாதிக்கப்பட்டு இருப்பதால் 234 சட்டமன்ற உறுப்பினர்களும் இதே கருத்தைச் சொல்லக்கூடும். ஆகவே, அரசு வெள்ள அறிக்கை இந்த அவைமுன் வைத்த பின்பு விவாதிப்பதுதான் இதற்குச் சரியான முடிவாக இருக்கும் என்று கருதுகிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட பூசல் காரணமாக கம்பம் நகரில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் "13-2-1984 அன்று கம்பம் நகரில் உள்ள எனது வீட்டில் போலீசார் இரவு 1 மணிக்கு வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து சோதனையிட்டு உள்ளார்கள். கோஷா முறையைப் பின்பற்றிவரும் வீட்டிலுள்ள பெண்களைத் துன்புறுத்தி இருக்கிறார்கள். எனது சகோதரர் கல்லூரியில் பணியாற்றுபவரை அடித்து காவல் நிலயத்திற்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். எனது மூத்த சகோதரரைக் கைது